**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்- சென்னை – 600006,**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**ந.க.எண் 449/C7/SS/SMC/2021-22, நாள்.18 .03.2022**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - 2021-2022 ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மைக்குழு - பெற்றோர்கள் கூட்டம், Pamphlets Printing மற்றும் மறுகட்டமைப்பு - மாவட்டங்களுக்கு நிதி விடுவித்தல் - சார்பு.

**பார்வை:** 1. அரசாணை நிலை எண்.42, பள்ளிக் கல்வித்துறை (SSA1), நாள். 06.03.2019.

2. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண் 449/C7/SS/SMC/2021-22, நாள் 02.03.2022

3. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண் 449/C7/SS/SMC/2021-22, நாள் 17.03.2022

*****

பார்வை-3ல் உள்ள செயல்முறைகளின்படி மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு **20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)** அன்று பெற்றோர்கள் கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காண் செயல்முறைகளின் படி, பள்ளிகளின் எண்ணிக்கை சார்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இச்செயல்பாட்டிற்காக செலவினம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

தற்போது மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு இணைப்பிலுள்ளவாறு செலவினம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

| **வ.எண்** | **நிகழ்வு** | **செலவின விவரம்** |
|---|---|---|
| 1 | பெற்றோர்கள் கூட்டம் **20.03.2022** | கலந்து கொள்ளும் பெற்றோர்களுக்கான தேநீர் செலவினமாக ஒரு மாணவருக்கு ரூ.10/- வீதம் பள்ளியிலுள்ள மாணவர் எண்ணிக்கைகேற்ப மேற்கொள்ள வேண்டும். |
| 2 | அழைப்பிதழ் அச்சடித்ததல் | ஒரு மாணவருக்கு 0.50 பைசா வீதம் மாணவர்களின் எண்ணிக்கைகேற்ப மேற்கொள்ள வேண்டும் |
| 3 | பதாகை (பெற்றோர் கூட்டம் மற்றும் மறுகட்டமைப்பு 2 நிகழ்வுகளுக்கும் சேர்த்து ) | பள்ளி ஒன்றுக்கு ரூ.300/- வீதம் |

| | | |
|---|---|---|
| 4 | மறுகட்டமைப்பு நடத்தப்படும் நாள்___________ **ஏப்ரல் முதல் வாரம் தொடங்கி விரிவான கால அட்டவணை பின்னர் தெரிவிக்கப்படும்** | கலந்து கொள்ளும் பெற்றோர்களுக்கான தேநீர் செலவினமாக ஒரு மாணவருக்கு ரூ.10/- வீதம் பள்ளியிலுள்ள மாணவர் எண்ணிக்கைகேற்ப மேற்கொள்ள வேண்டும் |

மேற்காண் செலவின விவரத்தை இணைப்பில் உள்ளவாறு தொகை ரூ.6,26,31,644 Training of SMC தொடக்க நிலையிலும் மற்றும் ரூ.5,81,08,585 /- இடைநிலை நிதியிலிருந்து மொத்தத் தொகை ரூ.12,07,40,229 /- (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஏழு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்று இருபத்தி ஒன்பது ரூபாய் மட்டும்) மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

பார்வை-3ல் (17.03.2022 அன்று வழங்கப்பட்ட செயல்முறைகளின்) கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி மார்ச்-20ம் தேதி நடைபெறும் பெற்றோர்கள் கூட்டத்தினையும் மற்றும் ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து தொடங்கி நடைபெறவுள்ள மறுகட்டமைப்பையும் சிறப்பாக திட்டமிட்டு எவ்வித புகாருக்கும் இடமாளிக்க வண்ணம் நடத்திட தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாநில திட்ட இயக்குநருக்காக

18/3/22